1979 மார்ச் 17] [திரு. க. சுப்பு

தெரியவில்லை. இலாகாவிலிருந்து இதை உங்களுக்குக் கொடுத்தால் அதிலே உள்ள விவரங்களை எல்லாம் நீங்கள் பார்க்கலாம். அந்த மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய உரிமை பறிபோயிருக்கிறது. இந்த உண்மையை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மீண்டும் அந்த விவசாய மக்கள் உரிமை பெற நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்த அரசாங்கமே முன் வந்து குழாய் வைத்துக் கொடுத்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. மேலும் மகஜர் ஒன்றை இந்த அரசாங்கத்திற்கு அனுப்பியதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட மகஜர் வந்ததாகத் தெரியவில்லை. அப்படி மகஜர் வந்து அரசாங்கமே முன்வந்து குழாயை அமைத்திருந்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ) விவசாயிகள் கொடுத்து வந்த கரும்பை பெரம்பலூர் சர்க்கரை ஆலை, வாங்க மறுப்பது குறித்து:

* திரு. ரெ.வி. சவுந்தரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் சர்க்கரை ஆலையில் பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள், திருச்சி மாவட்டம், பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வந்த கரும்பை குருங்குளம் சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் தலையீட்டினால் பெரம்பலூர் சர்க்கரை ஆலை கரும்பை வாங்க மறுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தனது 1978–69 அரவை பருவத்திற்குத் தேவையான கரும்பினைச் சென்று ஆண்டு நடவு பருவத்திலேயே 6,858 ஏக்கர் என்ற அளவில் பதிவு செய்து கொண்டது. போதுமான அளவிற்கு கரும்பு இருப்பதினால் பதிவு செய்யப்படாத கரும்பிற்கு முன்னுரிமை தந்து அரவைக்கு எடுத்துக் கொள்வது என்பது இயலாது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 1

ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, பெரம்பலூர் வட்டம், திருச்சி மாவட்டம் தொடர்ச்சியாக நாள்தோறும் 1,250 டன்கள் அரவை செய்வதற்கு குறைந்த அளவில் பதிவு செய்யப்படாத கரும்பைத் திருவையாறு துணை வட்டத்திலிருந்து மட்டும் எடுத்துக் கொள்வதற்கு கரும்பு ஆணையரது அனுமதியைப் பெற்று உள்ளது. பதிவு செய்யப்படாத கரும்பினை 26—1—1979-ந் தேதியிலிருந்து எடுத்து நாளது வரை 2,150 டன்கள் அரைத்து உள்ளது. பிப்ரவரித் திங்கள் முடிய காவேரி சர்க்கரை ஆலை தனது அரவையினைத் துவங்காததால் 14, 15 மாதங்களுக்கு மேல் முதிர்ச்சி அடைந்த கரும்பை அரைக்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் அனுப்பியுள்ள மனுவின் பேரிலும், ஆலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளின் பேரிலும், பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கு 20,000 டன்களும் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு 5,000 டன்களும், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு 5,000 டன்களும் கரும்பு ஆணையரால் ஒதுக்கப்பட்டன. பதிவு செய்து உள்ள கரும்பினை ஒரு ஆலை அரைக்க இயலாவிட்டால் மற்ற ஆலைகள் அதற்கு இடம் அளிக்க உதவுவது முறையாகும் என்ற அடிப்படையில் மேற்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

கீழேயுள்ள அனுபந்தத்திலிருந்து 5 சர்க்கரை ஆலைகள் 1977–78-ல் அரைத்த, 1978–79 அரைக்க இருக்கும் கரும்பின் அளவுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

வரிசை எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும்.	1977–78-ல் அரைத்த கரும்பு, மொத்த அளவு. (லட்சம் டன்களில்).	1978–79-ம் அரவைப் பருவத்திற்கு அரவைக்கு இருக்கும் கரும்பின் அளவு. (லட்சம் டன்களில்).
1. கோத்தாரி	2.67	2.42
2. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, தஞ்சாவூர்.	2.19	2.25
3. ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, பெரம்பலூர்.	1.41 (சோதனை ஓட்டம்).	2.00
4. காவேரி	1.47	1.83
5. திரு. ஆரூரான் ..	2·24	2.15

1979 மார்ச் 17] [திரு. ப. குழந்தைவேலு]

பதிவு செய்வதற்குச் சென்ற ஆண்டே வாய்ப்பு இருந்தும், பதிவு செய்யத் தவறிய கரும்புக்கு முன்னுரிமை அளிப்பது இயலாது ஒன்று. தற்சமயம் சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருப்பதினால், அதிக அளவில் கருமபு அரைக்க முன்வரும் சூழ்நிலையில் ஆலைகள் இல்லை. ஆலைகள் தங்களது திறனுக்கு அதிகமாகவே கரும்பு பிழிந்து கொண்டு இருக்கின்றன. பதிவு செய்துள்ள கரும்பினை அரைத்தால் மே/ஜூன் மாதம் வரை பருவம் நீடிக்கக்கூடிய வாய்ப்பு தற்போது உள்ளது. இந்தச் சூழ்நிலையில் பதிவு செய்யப் படாத கரும்பினை பெரும் அளவில் எடுக்க இயலாது. மிகச் சிறிய விவசாயிகள் அல்லலுற்றால் கரும்பு ஆணையரோடு தொடர்பு கொண்டு தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். திருச்சி மாவட்டத்திலுள்ள பேட்டை வாய்த்தலையில் உள்ள காவேரி சர்க்கரை ஆலை தனது 1978—79-ம் முக்கிய பருவத்தின் அரவையை 3—3—1979 முதல் துவங்கியுள்ளது. ஆகவே, சுற்றுப்பகுதியிலுள்ள கரும்பு விவசாயிகள் தங்களது கரும்பினை அரவைக்கு அளிப்பதில் சிரமம் ஏதும் இராது என நம்புவதற்கு வாய்ப்பு உள்ளது.

* திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஒரு ஆலையிலிருந்து பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள் வேறு ஆலைக்கு அனுப்புவதற்குக் காரணம் என்ன? அப்படி அனுப்பப் படாமல் தடை செய்யாததற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதைத்தான் விவரமாக அறிக்கையில் விவரமாக சொன்னேன். ஒரு ஆலையிலிருந்து இன்னொரு ஆலைக்கு கொண்டு போகக்கூடிய நிர்ப்பந்தம், ஒரு ஆலைக்குக் கரும்பு தேவையாக இருந்தால் தேவையாக இருக்கக் கூடிய ஆலைக்கு அதிகமாக உற்பத்தி செய்திருக்கிற கரும்பை கொண்டு செல்கிற வழக்கம் இருக்கிறது.

(ஐ) இராமேஸ்வரத்தில் மர்மக் காய்ச்சலினால் சிறுவர்கள் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ்.ஜே. சாதிக் பாட்சா, க. சுப்பு, மு. அம்பிகாபதி, மு. அரங்கநாதன், ஒ. எஸ். வேலுச்சாமி, எஸ். எம். வாசன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.